## மகனே உன் நெஞ்செனக்கு

மகனே உன் நெஞ்செனக்கு தாராயோ
மோட்ச வாழ்வை  தருவேன் இது பாராயோ

அகத்தின் அசுத்தமெல்லாம் துடைப்பேனே
பாவ அழுக்கை நீக்கி அருள் கொடுப்பேனே

உன் பாவம் முற்றும் பரிகரிப்பேனே – அதை
உண்மையாய் அகற்ற யான் மரித்தேனே

பாவம் அனைத்துமே விட்டோயோ
நித்ய பரகதி வாழ்வை இன்றே தேடாயோ

உலக வாழ்வினை விட்டகல்வாயோ
மகா உவப்பாய் கதி ஈவேன் மகிழ்வாயே

உந்தன் ஆத்துமத்தை நீ படைப்பாயே
அதில் உன்னதர் வசிக்க இடம் கொடுப்பாயே